**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 135/2013

நாள்: 14.11.2025

பெயர்: ராஜலெட்சுமி (வா.சா.1) த/பெ: ஆனந்த்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1. என்னுடைய தாயாரின் பூர்வீகம் செந்துறை ஆகும். எனது தந்தையின் பூர்வீகம் மயிலாடுதுறை மாவட்டத்தில் மங்கநல்லூர் கிராமம். எனது அப்பாவிற்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது சித்தப்பா அனுபவத்தில் உள்ளது. எனது அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கும் பாகம் பிரித்துவிட்டதா என்றால் இல்லை. சாட்சி தாமாக முன்வந்து எனது சித்தப்பா அப்பாவிற்கு எதுவும் தராமல் அவரே வைத்துக்கொண்டார். அப்பாவிற்கு எவ்வளவு பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்குதான் தெரியும். நாங்கள் பூர்வீக சொத்தை பொறுத்து வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

2. ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சிறுவயதிலேயே எனது தகப்பனார் வீட்டை விட்டு வெளியேறி சுயசம்பாத்யம் செய்தார். அதனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பூர்வீக சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். எனது அப்பா தற்போது உயிருடன் இல்லை. 13.03.2020 ல் இறந்து விட்டார். எனது அப்பாவிற்கு ஒரு மகன் (1ம் பிரதிவாதி) மற்றும் என்னையும் சேர்த்து 3 மகள்கள். எனது அம்மா உயிருடன் உள்ளார். அவரது மகள்கள் மட்டும் பராமரித்து வருகிறோம். எனது மூத்த சகோதரிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எனது இளைய சகோதரிக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனக்கும் இளைய சகோதரிக்கும் வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் திருமணம் ஆனது.

3. எனது இளைய சகோதரி கணவருடன் வசித்து வருகிறாரா என்றால் வசித்து வருகிறார். நான் திட்டக்குடியில் உள்ள போத்திரமங்களம் என்னும் ஊரில் திருமணம் செய்துகொண்டேன். எனது கணவர் தற்போது சொந்த ஊரில்தான் இருக்கிறாரா என்றால் இல்லை. வெளிநாட்டில் இருக்கிறார். நானும் எனது கணவரும் சேர்ந்து வாழாமல் பிரிந்து வாழ்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. சேர்ந்து தான் வாழ்கிறோம்.

(சாட்சி இந்த கேள்விக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கிறார்). எனது தாயாருக்கம் சகோதர சகோதரிகளுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லாமல் சேர்ந்துதான் இருக்கிறோம். எனது மூத்த சகோதரி மற்றும் அம்மாவை ஏன் வழக்கில் எதிர்தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே எனது அப்பா உயில் எழுதி வைத்தார். எனக்கும் எனது இளைய சகோதரிக்கும் அப்போது திருமணம் ஆகவில்லை. அதனால் எங்கள் பெயரில் உயில் எழுதி வைத்து வைத்தார்.

4. எனது மூத்த சகோதரியையும் அம்மாவையும் Profoma பார்ட்டியாக சேர்த்துள்ளோம். அவர்களை குறித்து எங்களுக்கு எந்த பரிகாரமும் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண். 340/1 ஆகும். அதன் விஸ்தீரணம் 9 1/2 செண்ட் ஆகும். அதன் அகலம் மற்றும் நீளம் தெரியாது. எனது அப்பா சோழியவெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவரா என்றால் இந்த கேள்விக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை அதனால் பதில் கூற விருப்பமில்லை என சாட்சி கூறுகிறார். எனது அம்மா கார்காத்தவெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவரா என்றால் இந்த கேள்விக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை அதனால் பதில் கூற விருப்பமில்லை என சாட்சி கூறுகிறார். கலப்பு திருமணம் செய்வோருக்கு தனது தந்தை வழி தான் சாதி சான்று தான் கிடைக்கும் என்று சொன்னால் அது தாய் தந்தையின் சாதியை பொறுத்து எதை வேண்டுமானாலும் தேர்வு செய்து கொள்ளலாம். எனது தந்தை சோழியவெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் 1ம் பிரதிவாதிக்கு சோழியவெள்ளாளர் என சாதி சான்றிதழ் கொடுத்துள்ளார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது தந்தை சோழியவெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர் இல்லை.

5.தாவா சொத்தில் ஒரு ஓட்டு வீடு மற்றும் மெத்தை வீடு உள்ளதா என்றால் கட்டி முடிக்கப்படாத ஒரு கட்டிடம் உள்ளது. தற்போது ஓட்டு வீடு இல்லை ஓட்டிற்கு பதிலாக தகரம் போட்டுள்ளோம். தாவா சொத்தின் மெத்தை வீட்டில் தான் 1ம் பிரதிவாதி வசித்து வருகிறாரா என்றால் வசித்து வருகிறார். அது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது. அந்த வீட்டிற்கு தனியாக வரி செலுத்தப்பட்டு வருகிறதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த வீடு யார் கட்டினார்கள் என்றால் எனது அப்பா தனது சொந்த செலவில் கட்டினார். அந்த வீட்டிற்கு பிளான் அப்ரூவல் வாங்கப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து அப்பாவுக்குதான் தெரியும். ஒரு வீட்டை கட்டுவதற்கு பிளான் அப்ரூவல்

வாங்கவேண்டும் என்பது குறித்து எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு எனது அப்பா பெயரில்தான் பிளான் அப்ரூவல் வாங்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் நகராட்சியில் பிளான் அப்ரூவல் வாங்கப்பட்டதா என்றால் அது குறித்த எனக்கு தெரியாது.

6. வழக்கு சொத்தில் உள்ள வழக்கு சம்பந்தப்பட்ட அடிமனைக்கு அப்ரூவல் வாங்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். எனது அம்மாவிற்கும் தெரியாது. வழக்கு சொத்து பொறுத்து ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறும் ஆதரவுக்கு விவரம் எதுவும் தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எனது அப்பாவிற்கு தெரியும். நான் எனது முதல் நிரூபண வாக்குமூலத்தில் 11.06.1986ம் ஆண்டு ஏற்பட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தை பற்றி நேரடியாக தெரியுமா என்றால் அப்போது எனக்கு ஒரு வயது. எனக்கு தெரியாது. அப்பாவிற்கு தான் தெரியும். அந்த கிரய ஒப்பந்தத்தில் பேசப்பட்ட கிரய தொகை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதை பார்த்தால்தான் தெரியும். 11.06.1986ல் ஏற்பட்ட கிரய ஆவணத்தில் ஏற்பட்ட சங்கதிகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது எனது தந்தையால் போடப்பட்ட ஒப்பந்தம். அது குறித்து எனக்கு தெரியாது. எனது தந்தைக்குதான் தெரியும். மேற்படி ஆவணத்தில் ஜெயங்கொண்டம் பேரூராட்சியில் NOC சான்றிதழும், டவுன் பிளான் அப்ரூவல் பெறப்பட வேண்டும் என்ற விவரம் அதில் உள்ளதா என்றால் அது குறித்து எனது தந்தைக்குதான் தெரியும். அந்த கிரய ஒப்பந்த பத்திரமான வா.சா.ஆ.1 ல் பேசப்பட்ட கிரய ஒப்பந்த தொகை மீதம் கொடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்தா என்றால் கொடுக்கப்பட்டது. அதுதான் வா.சா.ஆ.3 என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எவ்வளவு நாள் பாக்கி ஒப்பந்த தொகையை கொடுப்பதற்கு காலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால கெடுவுக்குள் கிரயம் செய்யப்பட்டதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 அதில் குறிப்பிடப்பட்டுள்ள கால கெடுவுக்குள் கிரயம் செய்யப்பட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. 22.09.1986 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரமான வா.சா.ஆ.2 எதற்காக ஏற்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஆனால் அது தாவா சொத்தை பொறுத்ததுதான் என்று எனது அப்பா கூறியுள்ளார். மேற்படி ஆவண தேதியில் தொகை பரிமாற்றம் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் அதுகுறித்து எனக்கு நேரடியாக தெரியாது.

அப்பாவிற்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் குறித்து நான் எனது அப்பா வீட்டில் வைத்திருந்தபோது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் பார்த்துள்ளேன். எந்த ஆண்டு பார்த்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 15.02.1988 தேதியிட்ட கிரய பத்திரம் பற்றி தெரியுமா என்றால் எனது அப்பா சொல்லி தெரியும். அது அவர் வாங்கிய கிரயம் என கூறியுள்ளார். அதில் உள்ள தொகை பரிமாற்றம் குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்குதான் தெரியும்.

8. எனது அப்பாவிற்கு கடன் ஏதேனும் இருந்ததா என்றால் இருந்தது. சாட்சி தாமாக முன்வந்து பல கடன்கள் வாங்கியுள்ளார். 1ம் பிரதிவாதி திருமணம் மற்றும் அவரை வெளிநாட்டிற்கு அனுப்ப, தாவா சொத்தில் வீடு கட்டியது ஆகியவற்றிற்காக கடன்கள் வாங்கியுள்ளார். இந்த 2 காரணத்திற்காக மட்டும்தான் கடன் வாங்கியுள்ளார். யாரிடம் கடன் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அப்பாவிற்கு தான் தெரியும். எவ்வளவு தொகை கடன் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது அப்பா Finance வாங்கிதான் வீடு கட்டினார். எந்த Finance யிடம் கடன் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எந்த ஆண்டு வெளிநாடு போனார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 2003ம் ஆண்டு வெளிநாடு சென்று 2010 வரை வேலை பார்த்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து தெரியாது. வெளிநாட்டிலிருந்து 1ம் பிரதிவாதி உண்டியல் மூலமாகவும் நேரடியாகவும் சம்பாரித்து கொடுத்த பணத்தில் 17 1/2 சவரன் போட்டு எனது மூத்த சகோதரிக்கு திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் தான் செலவு செய்து திருமணம் செய்து வைத்தார். என்னையும், எனது இளைய சகோதரியையும் 1ம் பிரதிவாதிதான் செலவு செய்து படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா தான் செலவு செய்தார். 1ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆன பிறகு அவரது மனைவியை நாங்கள் துன்புறுத்தி அடித்தோம் என்றும் அதனால் அதன் பேரில் எங்கள் மீது புகார் அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவர்தான் எங்களை துன்புறுத்தினார். அதற்காக எங்கள் தரப்பில் அவர்கள் மீது புகார் அளிக்கப்பட்டது. அதன் பேரில் தற்போது criminal வழக்கும் நிலுவையில் உள்ளது.

9. அந்த கட்டிடம் முடிவு பெறாத நிலையில் தங்குவதற்கு வேறு இடம் இல்லாததால் 1ம் பிரதிவாதி கதவு இல்லாமல் அங்கு தங்கி வந்த நேரத்தில் நாங்கள் சாக்கடை தண்ணீரை எடுத்த அவர் குழந்தை மீது ஊற்றினோம் என்றால் இல்லை. அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை. தாவா சொத்தின் பட்டா எங்களது பெயரிலோ எங்களது அப்பா பெயரிலோ உள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது. எனது அப்பா 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தை வாங்கியதால் இந்த வழக்கு தாக்கல் செய்தோம்.

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒப்பம்/−ராஜலெட்சுமி

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/− S. தனலெட்சுமி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்